கூட்ட எண் 02 நகராட்சி அலுவலகம்,
2020 - 2021 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 29.05.2020

2020-ம் ஆண்டு மே மாதம் 29.05.2020-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் மே 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3.ஆரணி நகராட்சியில் MCC உள்ள நான்கு இடங்களில் மின்விசிறிகள் மற்றும் தேவையான மின்உபகரணங்கள் விநியோகம் செய்தல் பணிக்கு ஆகும் செலவின தொகை ரூ.30,000/-ற்கு, 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால்,அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி பெற்று தனியார் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கபடுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவுசெய்யலாம். (ந.க.எண் : **766 /2019/இ1)**

4.ஆரணி நகராட்சியின் அலுவலக கட்டிடம்,மேல் நிலை நீர் தேக்க தொட்டி, MCC SHEAD மற்றும் கார் பார்கிங் போன்ற இடங்களில் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நலன் கருதி CCTV CAMERA பொருத்த வேண்டி (8 எண்ணிக்கை) இருப்பதால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி பெற்று தனியார் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மற்றும் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கபடுகிறது.
அலுவலக குறிப்பு :-மன்றம் பதிவுசெய்யலாம்.

5.ஆரணி நகராட்சியில் அலுவலகத்தில் உள்ள பொது கழிவறைக்கு வரும் தண்ணீர் பைப்பு அடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வராமல் உள்ளது. மேலும் பொறியியல் பிரிவு,நகரமைப்பு பிரிவு அறையில் தண்ணீர் பைப்பு அடைப்பு ஏற்பட்டு இருப்பதால் மேல்நிலை தொட்டியிலிருந்து புதியதாக PVC Pipe மற்றும் Toilet பகுதியில் ரிப்பேர் பணிகள் செய்து தர வேண்டி மதிப்பீடு ரூ.30,000/-யை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள நகர மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கபடுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவுசெய்யலாம். (ந.க.எண் : **766 /2019/இ1)**

6. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சமூக இடைவெளி நடைமுறைப்படுத்தவும் முககவசம் அணியாமல் வெளியே வருபவர்களுக்கும், சமூக இடைவெளி பின்பற்றாத வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகளுக்கும் அபராதம் விதிக்க ரசீது புத்தகங்கள் அச்சடித்துக்கொடுக்க 15.05.2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தினகரன் டிஜிட்டல் சைன்,<br>கோட்டை வழி பழைய பேருந்து நிலையம், ஆரணி. | கொரோனா அபராத புத்தகம் ஒன்றுக்கு | விலை ரூ. 300 |
| பாரதி அச்சகம், கார்த்திகேயன் ரோடு ஆரணி | கொரோனா அபராத புத்தகம் ஒன்றுக்கு | விலை ரூ. 290 |
| கோகிலா பிரஸ், தர்மராஜா கோவில் தெரு ஆரணி | கொரோனா அபராத புத்தகம் ஒன்றுக்கு | விலை ரூ. 280 |

அலுவலக குறிப்பு. 1.மன்றம் அனுமதிக்கலாம்.2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கோகிலா பிரஸ் ஆரணி விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.(கோப்பு எண். **627/2020/அ1)**

**7.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டம் மூலம் 1 முதல் 18 வரை வார்டுகளில் தினசரி தனியார் மயம் மூலம் இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணி மேற்கொண்டு வந்த BCS சென்னை நிறுவனம் மாதந்தோறும் EPF, ESI செலுத்தப்படவில்லை. இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர்(பொ) அவர்களின் குறிப்பின்படி, நகராட்சியில் ஆட்கள் பற்றாக்குறை காரணமாகவும், தற்போது கொரோனா நோய் தடுப்பு காரணமாக (144 தடை உத்தரவு) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவசர அவசியம் கருதி தூய்மை பணி தொடர்ந்து நடைபெற 01.06.2020 முதல் 31.08.2020 வரை மட்டும் ஒப்பந்த அடிப்படையில் 116 துப்புரவு பணியாளர்கள் கொண்டு தூய்மை பணிமேற்கொள்ள G5S SECURITY SERVICE, CHENNAI என்ற நிறுவனத்திற்கு வழங்கவும், அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ. 60.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : 1.மன்றம் அனுமதிக்கலாம்.2.01.06.2020 முதல் 31.08.2020 வரை பணி அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண். 264/2020/எச்1)

**8.**இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு (SBM) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பரப்புரையாளர்கள் வீதம் மொத்தம் 8 பரப்புரையாளர்களுக்கு தேவையான பதிவேடுகள் கலர் புகைப்பட அறிக்கைகள் தயார் செய்தமைக்கும், பென்டிரைவ், மற்றும் A4 பேப்பர் போன்றவை வாங்கியமைக்கு தோராய செலவின தொகை ரூ. 10000/- மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம். .

9.ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 4 MCC மையத்தில் நுண்ணுயில் உரம் தயாரிக்க மக்கும் குப்பைகளிலிருந்து இயற்கை உரம் தயாரித்தல் பணி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் பணிகளும் 5வது MCC காஜிவாடையில் பிளாஸ்டிக் மற்றும் மக்காத குப்பை சேகரிக்கும் பணி செய்ய மல்லிகை சுயஉதவிக்குழு ஒப்பந்தம் கொடுக்கப்பட்ட நிலையில் இதனால் வரையில் ஒப்பந்த பணியாளர்களுக்கு மாதந்தோறும் EPF, ESI செலுத்தப்படவில்லை. இதனால் வருங்காலத்தில் தணிக்கைதடை தவிர்க்கும் விதமாக 01.06.2020 முதல் அருணை கம்பியூட்டர் பார்ம்ஸ் (அரசு அங்கீகாரம் பெற்றது) என்ற நிறுவனத்திற்கு 1 வருட காலத்திற்கு 25 பேர் பணி செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்கள் நிர்ணயித்த தினசரி கூலி ரூ. 370/- என்ற அடிப்படையில் ஒரு வருடத்திற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 50.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று 01.06.2020 முதல் 1 வருடத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண். 3318/2018/எச்1)

10.ஆரணி நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி தெளித்தல் மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள மல்லிகை சுயஉதவிக்குழு மூலம் 50 தற்காலிக பணியாளர்கள் ஏற்கனவே பணிபுரிந்து வருகின்றனர். மல்லிகை சுயஉதவிக்குழு ஒப்பந்தம் கொடுக்கப்பட்ட நிலையில் இதனால் வரையில் ஒப்பந்த பணியாளர்களுக்கு மாதந்தோறும் EPF, ESI செலுத்தப்படவில்லை. இதனால் வருங்காலத்தில் தணிக்கைதடை தவிர்க்கும் விதமாக 01.06.2020 முதல் அருணை கம்பியூட்டர் பார்ம்ஸ் (அரசு அங்கீகாரம் பெற்றது) என்ற நிறுவனத்திற்கு 1 வருட காலத்திற்கு 50 பேர் வீதம் பணி செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்கள் நிர்ணயித்த தினசரி கூலி ரூ. 370/- என்ற அடிப்படையில் 1 வருடத்திற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 80.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:1.மன்றம் அனுமதிக்கலாம்.2.மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.3.அவசர அவசியம் கருதி நோய் தடுப்பு பணியாளர்கள் பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர் முன் அனுமதி பெற்று 50 நபர்கள் சப்ளை செய்ய அருணை கம்பியூட்டர் பார்ம்ஸ்க்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண். 538/2020/எச்1)

11.ஆரணி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-2020 ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 13.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு 17 கோபால் தெரு கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி | 2.00 | E.இளங்கோவன்<br>A.அசோக்குமார் | 0.05%குறைவு<br>0.13%. அதிகம் |

அலுவலக குறிப்பு :-1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2.மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்க்கு பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

12. ஆரணி நகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள் 2019-2020 ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 13.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | கங்கையம்மன் கோவில் தெரு அங்கன்வாடி மையம் மறு சீரமைத்தல் பணி | 2.00 | E.இளங்கோவன்<br>R. கந்தன் | 0.04%குறைவு<br>0.17%. அதிகம் |

அலுவலக குறிப்பு :-1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2.மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்க்கு பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

13. ஆரணி நகராட்சி அலுவலகத்தில் வரி செலுத்தவரும் பொது மக்களுக்கு குடிநீருக்காக பொருத்தப்பட்ட RO பிளான்ட் இயந்திரம் பழுது ஏற்பட்டு உள்ளது. மேற்படி உள்ள RO பிளான்ட் இயந்திரத்தினை பழுது சரி செய்திட ஆகும் தோராய செலவினம் ரூ.30,000/-யை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.